# நித்தியத்திற்குள்






"பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்."

(1 யோவான் 3:2)

நமது வாழ்நாள் முழுவதும் தேவனுடன் உறவு கொள்வதும் அவரை அறிந்து கொள்வதும் மிக அவசியமானதாக இருந்தாலும், அதுவே கிறிஸ்தவரின் இலக்கு அல்ல.

நாம் அதைவிட மேலான ஒன்றை நாடுகிறோம். இங்கே நாம் சந்தித்து தொடர்புகொண்டவரை நேருக்கு நேர் சந்திக்க விரும்புகிறோம்.

அந்த தருணம் வர இன்னும் எவ்வளவு காலம் உள்ளது? அதன்பிறகு என்ன நடக்கும்? இந்த அறிவு எனது அன்றாட வாழ்க்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது?





காத்திருக்கும் நேரம்

இரண்டாம் வருகை





வீடு சேருதல்

நித்தியத்தில் நாம் என்ன செய்வோம்?





நம்முடைய பொறுப்பு


# காத்திருக்கும் நேரம்

"மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக." (2 தீமோத்தேயு 3:1)

இயேசு தமது இரண்டாம் வருகைக்கு முன்னதாக நிகழவிருக்கும் அடையாளங்களை நமக்கு அளித்தார். அவை, அந்த தருணம் நெருங்க நெருங்க மேலும் தீவீரமடையக்கூடிய தொடர்ச்சியான சூழல்களாகும் (மத். 24:6-11):



- யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும்
- தேசங்களுக்கு விரோதமாக தேசம்
- வாதைகள், பஞ்சங்கள், மற்றும் பூமியதிர்ச்சிகள்
- கிறிஸ்தவர்கள் வெறுக்கப்படுவார்கள்
- பொதுவான விசுவாச துரோகம்
- ஏமாற்றக்கூடிய கள்ள தீர்க்கதரிசிகள்



தற்போது நடைபெற்று வரும் ஆயுத மோதல்களின் வரைபடம்:

- பெரும் போர்கள் (10,000 மரணத்திற்கும் மேல்)
- சிறிய போர்கள் (1,000-9,999 மரணங்கள்)
- மோதல்கள் (100-999 மரணங்கள்)
- சிறு மோதல்களும் நேரடி மோதல்களும் (1-99 மரணங்கள்)

இந்த "கொடிய காலங்களில்" நம் தன்னம்பிக்கையை தொடர(2 தீமோ. 3:1) நாம் தேவனுடன் சரியான உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும், மேலும் அவர் நம் பாவங்களை மன்னித்திருக்கிறார் என்றும், அவரால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றும் உறுதியை கொண்டிருக்கிறோம்.



ஒரு ஆவிக்குரிய எழுப்புதல் தேவை. ஆசாபைப் போல நாம் ஜெபிக்க வேண்டும்: "தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும், உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்." (சங்கீதம் 80:3).

# இரண்டாம் வருகை

"வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்." (மத்தேயு 24:31)

மத்தேயு 24:29-31 இந்த மாபெரும் நிகழ்வின் முக்கிய அம்சங்களை விவரிக்கிறது. இந்நிகழ்வின் காட்சி பிண்ணனியை மற்ற வேதபகுதிகள் மேலும் முழுமைப்படுத்துகின்றன:



அந்த தருணத்தில், எக்காளங்கள் முழங்கும்போது, ஒவ்வொரு மனிதனின் கண்களும் இயேசுவை காணும் போது, அந்த எதிர்பார்ப்பிற்கு அது தகுதியானதே என்பதை நாம் அறிந்துகொள்வோம். விடாமுயற்சியுடன் ஏறெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஜெபமும, அவருடன் நேரத்தை செலவிடுவதற்கு நாம் முன்னுரிமை அளித்த ஒவ்வொரு தருணமும், அவருக்காக தைரியமாக பேசிய ஒவ்வொரு முறையும், நாம் சந்தித்த ஒவ்வொரு சோதனையும் — அவருடைய முகத்தை காண்பதில் நிறைவடையும்.





பெரும் பேரிடர்கள் பூமியை உலுக்கின்றன (வெளி. 6:12-14)



மனுஷக்குமாரனின் அடையாளம் தோன்றுகிறது (ஒரு சிறு மேகம்)



இயேசு மேகங்களிருந்து வெளிப்பட்டு வருகிறார் (வெளி. 1:7)



அவரது குரல் இறந்தவர்களை எழுப்புகிறது, உயிருடன் இருப்பவர்களை உருமாற்றுகிறது (யோவான் 5:28; 1 தெசலோனிக்கேயர் 4:16; 1 கொரிந்தியர் 15:51-52)



தேவதூதர்கள் மீட்கப்பட்டவர்களை ஒன்றுதிரட்டி, அவர்களை இயேசுவிடம் கொண்டுவருகிறார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:17)

# வீடு சேருதல்

"என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்." (யோவான் 14:2)





பரலோகத்தில் இயேசு நமக்காக ஒரு இடத்தை, அதாவது நாம் வாழ்வதற்கான ஒரு நகரத்தை ஆயத்தம் செய்துள்ளார்: அதுவே புதிய எருசலேம் (யோ. 14:2; எபி. 11:10; வெளி. 21:10).




இந்த நகரம், அதனுடைய குடிகளோடு – நாம் – "ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டி" என்று அழைக்கப்படுவோம்(வெளி. 21:2, 9; வெளி. 19:7-8).

நம்முடைய புதிய வீட்டில் நாம் கலந்துகொள்ளும் முதல் நிகழ்ச்சி மறக்கமுடியாததாக இருக்கும்: ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவிருந்து (வெளி. 19:9).



ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டியாக திகழ, நாம் முதலில் இப்பூமியில் அவருடைய மணவாட்டியாக இருக்க வேண்டும். இயேசுவோடு இப்போது நாம் நெருங்கிய உறவை கொண்டிருக்க வேண்டும். அவரை அறிந்துகொள்ளவும், அவரோடு தினமும் பேசவும், அவரை நம்பவும், அவரோடு என்றென்றும் வாழப்போகும் அந்த நாளுக்காக ஏங்கவும் வேண்டும்.




# நித்தியத்தில் நாம் என்ன செய்வோம்?

"சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார் என்றான்." (வெளி 7:17)



பரலோகத்தில் நமக்கு கிடைக்கபோகும் மிகப்பெரிய ஆசீர்வாதம் என்னவென்றால், இயேசுவை காண்பதும், நமக்காக அவர் செய்த காரியங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்துவதுமே ஆகும்.



ஆனால் நாம் எப்போதும் பரலோகத்தில் வாழப்போவதில்லை. நமது இறுதி இருப்பிடமான பூமிக்கு நாம் இறங்கி வரும் காலம் ஒன்று வரும் (வெளி. 21:1-3; சங். 37:9). அங்கே தீமை இனி இருக்காது என்றாலும், இயேசு தொடர்ந்து நம்முடைய மேய்ப்பராக இருந்து, நம்மை அன்புடன் பராமரிப்பார்(ஏசா. 25:8; வெளி. 7:17).



நிச்சயமாக, அது ஒரு செயலற்ற வாழ்க்கையாக இருக்காது. தேவன் மனிதனை படைத்தப்போது அவனுக்கு ஒரு பணியை வழங்கியது போலவே, அங்கும் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம் இருக்கும். நாம் நம் அறிவை விரிவுப்படுத்தி கொள்ளவும், புதிய அதிசயங்களை தொடர்ந்து கண்டறியவும் முடியும்.

தற்போது நடப்பதற்கு நேர்மாறாக, அப்போது நம் சிந்தனைகள் முழுமையாக தேவனை நோக்கியே இருக்கும், அவருடைய அன்பு நம் இருப்பின் ஒவ்வொரு இழையையும் நிரப்பி வழியும் (வெளி. 14:1).


# நமது பொறுப்பு

“ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.” (வெளிப்படுத்தல் 22:17)

நமது நித்திய வீடாகிய—புதிய எருசலேமில்—ஜீவ தண்ணிரின் நதி தேவனுடைய சிங்காசத்திலிருந்து புறப்பட்டு, ஜீவ விருட்சத்திற்கு புத்துயிர் அளிக்கிறது (வெளி. 22:1-2). நிறைவான வாழ்வு, நித்திய வாழ்வு. அவரை சென்றடைவது இலவசம். இயேசு அதற்கான விலையை செலுத்திவிட்டார். பரிசுத்த ஆவியானவரின் அழைப்பிற்கு ஒரு நாள் நான் செவிசாய்த்து, அவரை சென்றடையும் வழியை அறிந்து கொண்டோம்: ஆனால் மற்றவர்களுக்கு இன்னும் அந்த வழி தெரியவில்லை.







நித்திய ஜீவனை பெற ஏங்கி, ஆனால் அதை அடைவது எவ்வாறு என்று தெரியாதவர்கள் மீது நமக்கு ஒரு பொறுப்பு உள்ளது, நாம் அதை உரக்க அறிவிக்க வேண்டும்: “தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.” (வெளி. 22:17).

அந்த தண்ணீரை நாம் பருகக்கூடிய காலம் வரும்வரை, காத்திருப்பதில் சோர்வடையாமல் இருப்போம். அந்த நம்பிக்கை நம்மிடம் உயிர்ப்புடன் இருக்கட்டும். வாருங்கள், ஆண்டவர் இயேசுவே.

“பெரும் போராட்டம் முடிவுக்கு வந்தது. பாவமும் பாவிகளும் இனி இல்லை. அகிலம் முழுவதும் தூய்மையடைந்தது. பரந்து விரிந்த படைப்பு முழுவதும் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் ஒருசேரத் துடித்தன. எல்லாவற்றையும் படைத்தவரிடமிருந்து உயிரும் ஒளியும் மகிழ்ச்சியும் எல்லையற்ற விண்வெளிப் பகுதிகள் எங்கும் பாய்ந்து பரவின. மிகச்சிறிய அணு முதல் மிகப்பெரிய உலகம் வரை, உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்துப் பொருட்களும், தங்கள் களங்கமற்ற அழகிலும் பரிபூரண மகிழ்ச்சியிலும், “**தேவன் அன்பானவர்**" என்பதை பறைசாற்றின.”

எலன் ஜி உவைட் (மாபெரும் ஆன்மீக போராட்டம், பக். 678)